உள்ளது உள்ளபடி

# தக்கார் குரல்

TNBIL/25/A2396

மலர் 1 | இதழ் 7 | ஏப்ரல் 2026 | மாத இதழ் | விலை ரூ.25

Volume 1 | Issue 7 | April 2026 | Monthly Magazine | Price RS.25





## சாத்தான்குளம் வழக்கு 9 காவலர்களுக்கு தூக்கு

## தீர்ப்பில் விளாசிய நீதிபதி




## தனது கட்சியை தானே தோற்கடித்த கமல்






## ஏற்பை இழந்த தேர்தல் அறிக்கைகள்

# தேர்தல் களம் 2026

**மக்களோடு மக்களாக தக்கார் குரல்**
**தமிழகமெங்கும் ஒலிக்கும்..!!**



தக்கார் குரல்

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**S.யூசுப் பாஷா**

வழிகாட்டுதல் குழு
**ஜோதிமணி,** மேனாள் நீதியரசர் உயர் நீதிமன்றம்
**ராஜதுரை**, மூத்த பத்திரிகையாளர்
**கே.ராஜேந்திர பிரபு,** மூத்த பத்திரிகையாளர்
**ஆஷிஸ்**, சட்ட ஆலோசகர்

பொறுப்பாசிரியர் **S.சஞ்சய்காந்தி**

உதவி ஆசிரியர்கள்
**விஜயலட்சுமி பின்லாந்து**
**ஜோதி நரசிம்மன், S.சக்தி பாரதி**

சென்னை- நிருபர்கள்
தலைமை நிருபர் **பாலாஜி**
தலைமை புகைப்பட கலைஞர் **சதீஷ்**

மாவட்ட செய்தியாளர்கள்
சென்னை - **M.ஹர்ஷத்**
உயர் நீதிமன்றம் - **க.முகேஷ்**
புதுச்சேரி - **ஏ.கே.ஆர்**
காஞ்சிபுரம்- **கவி பாலா,**
**ராஜா** புகைப்படக்கலைஞர்
இராணிப்பேட்டை - **ராஜீவ்**
மதுரை - **கோபி கிருஷ்ணன்**
கொடைக்கானல் - **கணேசன்**
திருச்சி - **புவனேஸ்வரி**
கோவை - **அருண் சங்கீத்**
ராமநாதபுரம் - **கவின்**
போடி - **விஜய்**
இணையதள ஆசிரியர்- **தீப்நாத்**
விஷூவல் எடிட்டர் - **E.காலித்**
டிஜிட்டல் மார்க்கெட்டிங் - **யுகேந்திரன்**

வடிவமைப்பு
**பாரதி டிசைனர்ஸ்,**
மதுரை

மின்னஞ்சல்
thakkaarkural@gmail.com
Cell: 7550050088
செய்திகளை உடனுக்குடன் அறிய உங்கள் போனில்
ThakkaarKural App-ஐ டவுன்லோடு செய்யுங்கள்
இணையதள முகவரி
www.thakkaarkural.com

# நான்கு முனைப் போட்டியல்ல இது நெருக்கமான போட்டி

தமிழகத்தின் அடுத்த முதல்வர் யார் என்பதை தீர்மானிக்கும் 2026 பொதுத் தேர்தலில் ஏப்.23-ம் தேதி மக்கள் வாக்களிக்கப்போகிறார்கள். எப்போதும் இல்லாத வகையில் நான்கு முனைப் போட்டி நிலவுகிறது.

இதற்கு முன்பும் பல முனைப் போட்டிகள் நிலவின என்றாலும், அவற்றில் இரு கழகங்களின் அணிகளே பிரதானமாக இருக்கும். மூன்றாவது அணி பெயரளவில் போட்டியைத் தரும். இம்முறை அப்படியில்லை. விஜயின் தவெக குறிப்பிடத்தகுந்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

அதனால் வெற்றி பெற முடியாது என்றபோதிலும், வெற்றித் தோல்விகளை மாற்றியமைக்கும் வகையில் தவெக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே அரசியல் பார்வையாளர்களின் பொதுவான கருத்தாக உள்ளது.

பெரும் இழுபறிக்கு பிறகு கூட்டணியை உறுதி செய்த திமுக; அதைவிட பெரும் இழுபறிக்கு பிறகே தொகுதிப் பங்கீட்டை நிறைவு செய்தது. பல்வேறு மன வருத்தங்களுக்கு இடையேதான் திமுக கூட்டணிக் கட்சிகள் தொகுதிப் பங்கீட்டை நிறைவு செய்திருக்கின்றன. காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், விசிக உள்ளிட்ட கட்சிகளுக்கு தங்களுக்கு வழங்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையிலோ, தொகுதிகளிலோ திருப்தி இல்லை என்பதை வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டன.

பாஜகவை தமிழகத்துக்குள் காலூன்ற விட்டுவிடக்கூடாது என்ற ஒற்றைப் புள்ளிதான், இந்த கட்சிகளை ஓரணியில் நிறுத்திவைக்கிறது.

அதேநேரம் அதிசயக்கத்தக்க வகையில் அதிமுக கூட்டணி தனது தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையை சுமுகமாக முடித்துக் காட்டியது. பாஜகவின் அழுத்தத்தில் அதிமுக தலைமை சிக்கித் தவிப்பதாக பரவலாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், பாஜகவுக்கு 27 சீட்களை மட்டுமே தந்ததுடன், தொகுதி ஒதுக்கீட்டிலும் கறார் காட்டியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

அதிமுக கூட்டணியில் முரண்டுபிடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட பாஜக, பாமக, அமமுக கட்சிகள் அமைதியாக தொகுதிகளை பெற்றுச் சென்றதும், அவர்கள் கேட்ட தொகுதிகளை முடிந்தமட்டிலும் கொடுத்து அனுப்பியதும் அதிமுக தலைமையின் சாதுர்யம்தான்.

### தேமுதிகவுக்கு அடித்த ஜாக்பாட்

ஆட்சியை தக்கவைக்க கூட்டணி பலத்தை உயர்த்த எண்ணினார் முதல்வர் ஸ்டாலின். அதிமுக கூட்டணியில் பாமக இணைந்ததால், தேமுதிகவை உள்ளே கொண்டுவருவதன் மூலம்



வடதமிழகத்தில் கூட்டணி கணக்கில் வலுப்பெற முடியும் என கணக்குப் போட்டார். காங்கிரஸ் வேறு முரண்டுபிடித்து வந்தது.

இதையடுத்து, கூட்டணி பேரத்தில் கறார் காட்டும் பிரேமலதாவை சரிகட்டி கூட்டணிக்குள் கொண்டு வந்தது திமுக. 20-க்கும் மேற்பட்ட கட்சிகளை வளைத்ததன் மூலம் பிரம்மாண்ட இமேஜை கொண்டு வந்தார். பெரும் அரித்மெடிக் கணக்கு இருப்பதால் வீழ்த்தவே முடியாது கூட்டணி என்று ஊடகங்கள் திமுக கூட்டணியை வர்ணிக்கின்றன.

இதில் ஜாக்பாட் என்னவோ தேமுதிகவுக்குத்தான். பல ஆண்டுகளாக கூட்டணியில் இருந்து வரும் கம்யூனிஸ்ட், மதிமுக கட்சிகளுக்கு எண்ணிக்கையை குறைத்த திமுக, விசிக கேட்ட எண்ணிக்கையையும், கேட்ட தொகுதியையும் தர மறுத்தது. இதற்கு தேமுதிக உள்ளே வந்திருப்பதையும், மநீமவுக்கு சீட் ஒதுக்க வேண்டிய தேவையையும் சுட்டிக்காட்டியது.

2021 சட்டமன்ற தேர்தலில் தினகரனுடன் கரம் கோர்த்திருந்த தேமுதிக, 2024 லோக்சபா தேர்தலில் அதிமுக கூட்டணியில் இடம்பெற்றது. இந்த தேர்தலில் திமுக கூட்டணிக்கு வந்துள்ளது. திமுக கூட்டணியில் தேமுதிக இடம்பெறுவது இதுவே முதல்முறை.

ஒவ்வொரு தேர்தலிலும் ஒவ்வொரு கூட்டணியில் இருந்து வந்த தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது மற்ற கட்சிகளுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. கூடவே தேமுதிகவுக்கு ஒரு ராஜ்யசபா சீட் ஒதுக்கப்பட்டது. அதை மற்ற கட்சிகள் ஜீரணிக்க முடியாமல் திணறின.

கூடவே, மக்கள் நீதி மய்யத்துக்கு தொகுதிகள் எதையும் ஒதுக்காமல், அந்த கட்சியை கூட்டணியில் தக்க வைத்தது திமுக. வெளியிலிருந்து ஆதரவளிப்பதாக கூறிவிட்டு சென்றுவிட்டார் கமல்.

## தடுமாறிய திருமா

இந்த தேர்தலில் விசிக கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. அதற்கான வேட்பாளர்களை அறிவித்த அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், சிட்டிங் எம்எல்ஏக்கள் எஸ்.எஸ். பாலாஜி, பனையூர் பாபு, ஆளூர் ஷா நவாஸ் ஆகியோருக்கு சீட் தரவில்லை. மேலும், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் தானே களமிறங்கப்போவதாக அறிவித்தார்.

அதற்கு அவர் கூறிய காரணம் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. 2026 பொதுத் தேர்தலுக்கு பிறகு, தமிழக அரசியல் சூழல் மாறும் என்பதால் அதை எதிர்கொள்ள தான் மாநில அரசியலில் தொடர்ந்து கவனம் செலுத்த இருப்பதாகவும், அதற்காக தானே எம்எல்ஏ தேர்தலில் களமிறங்குவதாகவும் அறிவித்தார்.

திருமா கூறிய காரணம் சமூக ஊடகங்களிலும், பிரதான ஊடகங்களிலும் விவாதப் பொருளானது.



திமுக மெஜாரிட்டி பெறாது என்பதைத்தான் திருமாவின் பேச்சு சுட்டுவதாக பொருள் கூறப்பட்டது. இதனால், அழுத்தத்துக்கு ஆளான திருமா, சில தினங்களில் தனது முடிவில் இருந்து பின்வாங்கினார். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் முன்னாள் காங்கிரஸ் எம்.பி. இளையபெருமாளின் மகனை களமிறக்கியுள்ளார்.

### திருமா பேசியதன் காரணம் என்ன?

திருமாவின் இந்த தடுமாற்றத்துக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. தொகுதிகள் ஒதுக்கீடு விஷயத்தில் திமுக தரப்பு அணுகிய விதத்தில் அவர் மிகவும் மனமுடைந்து போனதாக கூறப்படுகிறது. இவ்வளவு தூரம் கூட்டணிக்காக தியாகங்கள் செய்தும், அதற்கு உரிய மரியாதை கிடைக்கவில்லை என்ற வேதனை அவரிடம் இருப்பதாக கூறப்படுகிறது.

அதனால்தான், தொடர்ந்து திமுக தரப்பை தர்ம சங்கடப்படுத்தும் வகையில் அவர் பேசி வந்திருக்கிறார். கமல்ஹாசனுக்கு தொகுதிகளை ஒதுக்கும்படியும், சொந்த சின்னத்தில் சிறிய கட்சிகள் போட்டியிடுவதை திமுக தடுக்கக் கூடாது என்பதையும் பொதுவெளியில் தெரிவித்து தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

அதன் தொடர்ச்சியாகவே, திமுக ஆதரவு நிலைப்பாட்டில் இருந்த சிட்டிங் எம்எல்ஏக்களுக்கு அவர் சீட் தரவில்லை என்றும் பரவலாக பேசப்பட்டது.

ஆனால், 2026 தேர்தலுக்கு பிறகு அரசியல் சூழல் மாறும் என்று அவர் கூறியதற்கு வேறு அர்த்தங்கள் கூறப்பட்டன. விஜயின் வரவால், அதிகம் பாதிக்கப்படுவது விசிகதான் என்று தரவுகள் கூறும் நிலையில், தனது கட்சிக்கு அடிப்படையாக விளங்கும் பட்டியல் சமூக வாக்குகளை தக்கவைத்துக் கொள்ள வேண்டிய தேவை திருமாவுக்கு எழுந்துள்ளது. அதனால்தான் அவர் தேர்தலில் களமிறங்க நினைத்தார். அதன்மூலம் தன் சமூக வாக்குகளை மீண்டும் ஒருங்கிணைக்க திட்டமிட்டார்.

### ஏன் பின்வாங்கினார் திருமா?

ஆனால், அந்த முடிவில் இருந்து திருமா பின்வாங்க முக்கிய காரணம் இருந்ததாக தெரிகிறது. தேர்தலில் திருமாவே நேரடியாக களமிறங்கி, தன் சமூக வாக்குகளை ஒருங்கிணைக்கும்போது, அதற்கு எதிராக பிற சமூக வாக்குகள் ஒருங்கிணையும் (Counter polarisation) ஆபத்து ஏற்பட்டதை திருமாவுக்கு திமுக தரப்பு விளக்கியுள்ளது. இதனால், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் கூட்டணி பெரும் பின்னடைவை சந்திக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதைக் கருத்தில் கொண்டுதான் திருமா தன் முடிவில் இருந்து பின்வாங்கியதாக தெரிகிறது.

இன்னொரு பக்கம் வேட்பாளர் தேர்வில் வழக்கம்போல் காங்கிரஸுக்குள் பெரும் களேபரம் நடந்து முடிந்தது. சத்தியமூர்த்தி பவனுக்கு வெளியே போராட்டங்களுக்கு பஞ்சமில்லை. ஜோதிமணி வரிசையாக வெளியிட்ட எக்ஸ் பதிவுகள், வேட்பாளர் தேர்வில் மாநில தலைமை மீது இருக்கும் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியது. ஜோதிமணி, ராகுலுக்கு நெருக்கமானவர் என்பதால், அவரது கருத்துகள்

ராகுலின் எண்ணங்களையே பிரதிபலிப்பதாக கூறப்பட்டது. இதனால், ராகுல் தேர்தல் பிரச்சாரத்துக்கு தமிழகத்துக்கு வருவாரா என்பது சந்தேகம்தான் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆக, இந்த தேர்தலில் ஆரம்பத்தில் இருந்தே திமுக கூட்டணி தடுமாறி வருவது கண்கூடாக தெரிகிறது. ஆனால், அவற்றை சமாளித்து களத்துக்குள் சென்று வேலைகளை தொடங்கிவிட்டன அந்த கூட்டணிக் கட்சிகள். ஆனால், சீட் ஒதுக்கீட்டில் ஏற்பட்ட மனப்புண் ஆறுமா அல்லது தேர்தலில் எதிரொலிக்குமா என்பதுதான் மில்லியன் டாலர் கேள்வி.

மறுபுறம், அதிமுக தலைமை வெற்றிகரமாக பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. ஏறக்குறைய அனைத்து தொகுதிகளுக்கும் சென்று பிரச்சாரம் செய்த தலைவராக எடப்பாடி பழனிச்சாமிதான் இருக்கக்கூடும். திமுகவை வீழ்த்துவது என்ற ஒற்றைப்புள்ளியில், அதிமுக கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவது நன்றாக தெரிகிறது.

பாஜக தரப்பிலும் வேட்பாளர் தேர்வில் குழப்பம் ஏற்பட்டது. முன்னாள் தலைவர் அண்ணாமலைக்கு சீட் இல்லையா என அவரது ஆதரவாளர்கள் சமூக வலைதளங்களில் கம்பு சுற்றினர். முன்னதாக அவர்கள், தேறாத தொகுதிகளை பாஜக தலையில் கட்டிவிட்டதாக எடப்பாடியை பிராண்டினர்.

ஆனால், எந்த சலசலப்பும் இல்லாததுபோல, பிரச்சாரத்துக்கு சென்றுவிட்டார் எடப்பாடி பழனிசாமி.

### கருத்துக்கணிப்புகள்

ஐஏஎன்எஸ் கருத்துக் கணிப்பு அதிமுக கூட்டணி சற்றே முந்துவதாகவும், லோக்பால் சர்வே திமுக மெஜாரிட்டி பெறும் என்றும் தெரிவித்தன. ஆக, இது முன்னெப்போதும் இல்லாத வகையிலான, கணிக்க முடியாது தேர்தல் என்ற நிலைக்கு சென்றுள்ளது.

விஜய் பிரிக்கும் வாக்குகள் எந்தக் கட்சியை பாதிக்கும், அல்லது விஜய் எந்த கட்சியின் வாக்கு வங்கிக்கு பெரும் சேதாரத்தை ஏற்படுத்தப் போகிறார் என்பதைப் பொருத்து தான் இந்த தேர்தல் முடிவு அமையும் என்று பலரும் அவதானிக்கிறார்கள்.

ஆனால், இதில் குறிப்பிடத்தகுந்த விஷயம், அவர்களில் ஒருவர் கூட விஜய் கட்சி வெல்லும் என்று சொல்லவில்லை என்பதுதான். நான்காவது போட்டியாளரான சீமான், வழக்கம்போல் யாருக்கும் எந்த பாதிப்பும் இன்றி செயல்பட்டு வருகிறார்.



### ‘குறைத்து மதிப்பிடாதீர்கள்’

இந்த இடத்தில், சி-ஓட்டர் சர்வே நிறுவனத்தின் யஷ்வந்த தேஷ்முக் கூறியதுதான் மிகவும் சிந்திக்க வைக்கிறது. இந்தியா டுடே டிவியில் பேசிய அவர், ‘எடப்பாடி பழனிசாமியை நாம் அனைவரும் குறைந்து மதிப்பிட்டுவிட்டோம். அவர் ஜெயலலிதாவைப்போல ஈர்ப்பு சக்தி இல்லாதவர். ஆனால், தொண்டர்களையும் கட்சியையும் தன் வசப்படுத்திவிட்டார். கட்சிக்குள் கலகம் செய்தவர்களை வீழ்த்திவிட்டார். ஏன் அமித் ஷாவையே தனது பேச்சுவார்த்தை மேஜைக்கு அழைத்து வந்து, தன் விருப்பப்படி ஒப்பந்தத்தை போட்டுள்ளார்.

கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக எம்எல்ஏ, எம்.பி., முதல்வர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் இருந்துள்ளார். அவர் வித்தியாசமானவராக தெரிகிறார்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நின்றாலும் அவரால் ஆச்சர்யங்களை ஏற்படுத்த முடியும் என்றே கருதுகிறேன். எனவே வரும் தேர்தல், யாரும் எதிர்பாராத வகையில் மிகவும் நெருக்கமான போட்டியாக அமையும் என்பது உறுதி’ என்று அவர் குறிப்பிட்டார்.

நடப்பவற்றையெல்லாம் பார்க்கும்போது அப்படித்தான் தோன்றுகிறது. இது நான்கு முனைப் போட்டியில்லை. நெருக்கமான போட்டிதான். முடிவு எப்படி வேண்டுமானாலும் வரலாம்.



# சாத்தான்குளம் வழக்கு 9 காவலர்களுக்கு தூக்கு

## தீர்ப்பில் விளாசிய நீதிபதி

– முகேஷ்




தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் செல்போன் கடை நடத்தி வந்த நிலையில், கொரோனா ஊரடங்கு விதிகளை மீறி இரவு 9 மணிக்கு மேல் கடையைத் திறந்ததாகக் கூறி, 2020 ஜூன் 19–ம் தேதி, தந்தை – மகன் இருவரையும் சாத்தான்குளம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கிருந்த





காவல்துறையினரால் கொடூரமாக தாக்கப்பட்ட பின்னர், இந்திய தண்டனை சட்டத்தின் 188, 269, 294(பி), 353, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். காவல் துறையினரின் கொடூர தாக்குதல் காரணமாக பென்னிக்ஸ் 2020 ஜூன் 22 அன்றும், ஜெயராஜ் ஜூன் 23 அன்றும் உயிரிழந்தனர்.

இவர்களின் மரணத்தைத் தொடர்ந்து, அப்போதைய இன்ஸ்பெக்டர் எஸ்.ஸ்ரீதர், சப்-இன்ஸ்பெக்டர்கள் பி.ரகு, எஸ்.பாலகிருஷ்ணன், ஏ.சமுதுர் கணேஷ், தலைமைக் காவலர் கே.பாலகிருஷ்ணன், காவலர்கள் எம்.முத்துராஜ், எஸ்.செல்லதுரை, எக்ஸ்.தாமஸ் பிரான்சிஸ், எஸ்.வெயிலுமுத்து, சிறப்பு எஸ்.ஐ. பால்துரை ஆகிய காவல்துறை அதிகாரிகள் மீது ஐபிசி பிரிவு 302, 342, 201, 182, 193, 211, 218, 120(பி), மற்றும் 34 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. விசாரணை நிலுவையில் இருந்தபோது, கொரோனா தொற்று காரணமாக பால்துரை இறந்தார்.

இந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. இந்த வழக்கு தொடர்பான ஆதாரங்களை அழிக்க அதிகாரிகள் முயற்சிப்பதாக குறிப்பிட்ட நீதிமன்றம், உடனடியாக சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட்டது.

சுதந்திரமான மற்றும் நியாயமான விசாரணையை உறுதி செய்வதற்காக டிஜிபி வேண்டுகோளின் பேரில் சிபிஐ விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட்டது.

உயர் நீதிமன்ற உத்தரவின்படி மதுரையில் உள்ள மாவட்ட முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் 6 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த இந்த வழக்கில் சிபிஐ 2,200-க்கும் அதிகமான பக்கங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தது.

குற்றம்சாட்டப்பட்டோர் தரப்பில், ‘கோபத்தில் நிகழ்ந்ததா அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்டதா என்பதை கருத்தில் கொள்ள வேண்டும், ஜெயராஜை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற வரை பிரச்சினை இல்லை, பென்னிக்ஸ் காவல்நிலையத்தில் தகராறு செய்த பின்னரே பிரச்சினை எழுந்துள்ளது. அவர் விசாரணையில் பிரச்சினை செய்ததால் எழுந்த கோபத்தின் காரணமாகவே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது என்று விசாரணை அறிக்கையில் உள்ளது. மரணம் விளைவிக்க வேண்டுமென்ற நோக்கம் இல்லை, திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலை அல்ல, அதற்காக வெளியிலிருந்து கொடூர ஆயுதங்கள் எதையும் வரவழைத்து பயன்படுத்தவில்லை, ஆகவே இதனை அரிதினும் அரிதான வழக்காக கருதத் தேவையில்லை. அரிதிலும் அரிதான வழக்கானாலும் குற்றவாளியின் குடும்பப் பின்னணி, மனநிலையையும் கருத்தில் கொள்ள வேண்டுமென உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. ஆகவே குறைந்தபட்ச தண்டனையை வழங்க வேண்டும்’ என்று வாதிடப்பட்டது.





சிபிஐ தரப்பில், 'குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். இரட்டை ஆயுள் தண்டனை அல்லது தூக்குத்தண்டனை போன்ற அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டது. காவல் மரணங்களில் எத்தகைய அதிகபட்ச தண்டனையையும் வழங்கலாம் என்பதையும், அரிதினும் அரிதான காவல் கொடூர வழக்குகளில் தூக்கு தண்டனை வழங்கலாம் எனவும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதையும் சிபிஐ தரப்பு சுட்டிக்காட்டியது.

அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில், தந்தை – மகன் கொலை வழக்கில் கடந்த மார்ச் 23-ம் தேதி நீதிபதி ஜி.முத்துக்குமரன் தீர்ப்பளித்தார். அப்போது, காவல்துறையினர் 9 பேரும் குற்றவாளிகள் என தீர்ப்பளித்தார். 'ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் இயற்கைக்கு மாறானவை, இறுதியில் அவை மரணத்தை ஏற்படுத்தியுள்ளன. மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்கள் என்று பிரேத பரிசோதனை அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன. ஜெயராஜுக்கு இதய நோயின் வரலாறு இருந்தபோதிலும் சுகவீனத்தால் மரணம் ஏற்பட்டதாகக் கூற முடியாது. உண்மையில் காவல்துறையினரால் மீண்டும் மீண்டும் தாக்கியதால் ஏற்பட்ட காயங்களால் தான் மரணம் ஏற்பட்டுள்ளது' என்பதற்கான ஆதரங்களை சுட்டிக்காட்டி, இருவரையும் கொலை செய்த 9 காவல்துறை அதிகாரிகளும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்தார்.

மேலும் அவர்களின் பணி கால விவரங்களையும், ஊதியம் தொடர்பான விவரங்களையும் தாக்கல் செய்ய அரசுக்கு உத்தரவிட்டிருந்தார். குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 பேருக்குமான தண்டனை விவரங்களை ஏப்ரல் 6-ம் தேதி நீதிபதி அறிவித்தார். அன்று காலை வழக்கு விசாரணை தொடங்கியது. ஆய்வாளர் ஸ்ரீதர், எஸ்.ஐ. ரகு கணேஷ் உள்ளிட்ட 9 காவல்துறையினரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அப்போது, குற்றவாளிகள் தரப்பு கருத்துகளை நீதிபதி கேட்டபோது, கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அவ்வாறு செயல்படவில்லை, கல்வி பின்னணி, குடும்பப் பின்னணி, குடும்பத்தினரின் உடல் நலக்குறைவு குறித்து குற்றவாளிகள் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

பிறகு சிபிஐ, தரப்பில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும், இரட்டை ஆயுள் தண்டனை அல்லது தூக்குத் தண்டனை போன்ற அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

நீதிபதி முத்துக்குமரன் முன்பாக ஜெயராஜின் மனைவி செல்வராணி, மகள் பெர்சி ஆகியோர் ஆஜராகி தங்களது தரப்பு வாதங்களை நீதிபதியிடம் முன்வைத்தனர். 'எந்த தவறும் செய்யாதவர்களை கொன்றுவிட்டனர், உடலில் உள்ள அனைத்து உறுப்புகளிலும் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர், இந்த வழக்கை அரிதினும் அரிதான வழக்காகவே கருத வேண்டும், முழு இரவும் வைத்து அடித்திருக்கிறார்கள். அதற்கு கொடூர ஆயுதங்கள் பயன்படுத்தவில்லை என


நீதிபதி முத்துக்குமரன்

**நீதிபதி தனது தீர்ப்பில், 'குற்றவாளிகள் அனைவருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. ஒரு கொலைக் குற்றத்துக்கு ஒரு தூக்கு தண்டனை என்ற அடிப்படையில், 2 கொலைகளுக்காக அனைவருக்கும் தலா 2 மரண தண்டனைகளை விதிக்கப்படுகிறது. மேலும் அவர்களிடமிருந்து, ஒரு கோடியே 40 லட்ச ரூபாயை அபாரதமாக வசூலிக்க வேண்டும். அந்த தொகையை மரணமடைந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் குடும்பத்துக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்று நீதிபதி ஜி.முத்துக்குமரன் குறிப்பிட்டார்.**

குற்றவாளிகள் தரப்பில் கூறப்படுகிறது,

ஆயுதங்கள் பயன்படுத்தினால் கூட அந்நேரமே முடிந்துவிடும், ஆனால் லத்தியால் தாக்கியிருக்கிறார்கள். பல மணி நேரம் விசாரணை எனும் பெயரில் லத்தியால் தாக்கப்பட்டது கொடூரமானது. கொடூர மனநிலையிலேயே காவல்துறையினர் நடந்து கொண்டுள்ளனர், ஆகவே, இதனை அரிதினும் அரிதான வழக்காகவே கருதி, உச்சபட்ச தண்டனையை வழங்க வேண்டும்' என ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் குடும்பத்தினர் கண்ணீர் மல்க முறையிட்டனர்.

பின்னர் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 காவல்துறையினருக்கும் தூக்கு தண்டனை விதித்து நீதிபதி ஜி.முத்துக்குமரன் தீர்ப்பளித்தார். தீர்ப்பில் நீதிபதி கூறியிருப்பதாவது:

மரண தண்டனை விதிப்பதை தவிர வேறு வழியே இல்லை என நீதிமன்றம் கருதுகிறது. இது அரிதினும் அரிதான வழக்கு என்றே தெரிகிறது. குற்றத்தின் அளவை பொறுத்தவரை, 2 பேர் உயிரிழந்துள்ளனர். அதன் கொடூரம் கருதியே சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு நேரடியாக கண்காணித்துள்ளது. இல்லையெனில், அவர்கள் உடல் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்பு உண்மையும் அடக்கம் செய்யப்பட்டிருக்கும். இருவரும் நிராயுதபானியாக இருந்தபோதும், இரவு முழுவதும் காவல் நிலையத்தில் வைத்து காவல் துறையினரால் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் வியாபாரிகள். சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருந்தவர்கள். அவர்கள் மீது எந்த குற்ற வழக்கும் இல்லை. இரக்கமின்றி அடித்ததை கொடூரமாகவே பார்க்க வேண்டும். பழி வாங்க வேண்டுமென்ற நோக்கில் இந்த கொடூர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

எங்கு அதிகாரம் உள்ளதோ? அங்கு பொறுப்பும் அதிகமுள்ளது. உச்ச நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டல்களை பறக்கவிட்டு பொதுமக்கள் அச்சப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் காவல்துறை செய்யப்பட்டுள்ளது. மனித மாண்பு சிதைக்கப்படுகையில், நாகரீகம் பின்நோக்கி செல்கிறது. காவல்துறை அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளனர். ஆனால், குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கோரிக்கையை வைக்கின்றனர். சாதாரண நபர்கள் இதே குற்றம் செய்திருந்தால் சாதாரண தண்டனை வழங்கலாம், ஆனால், தட்டி கேட்க வேண்டிய காவல்துறையே குற்றம் செய்துள்ளனர். இவ்வாறு நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

மேலும், நீதிபதி தனது தீர்ப்பில், 'குற்றவாளிகள் அனைவருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. ஒரு கொலைக் குற்றத்துக்கு ஒரு தூக்கு தண்டனை என்ற அடிப்படையில், 2 கொலைகளுக்காக அனைவருக்கும் தலா 2 மரண தண்டனைகளை விதிக்கப்படுகிறது. மேலும் அவர்களிடமிருந்து, ஒரு கோடியே 40 லட்ச ரூபாயை அபாரதமாக வசூலிக்க வேண்டும். அந்த தொகையை மரணமடைந்த ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் குடும்பத்துக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்று நீதிபதி ஜி.முத்துக்குமரன் குறிப்பிட்டார்.

# மக்களிடம் நம்பகத்தன்மையை இழந்துவிட்ட தேர்தல் அறிக்கைகள்!

**சேரல் இளஞ்செழியன்**, மூத்த பத்திரிகையாளர்









ஒரு காலத்தில் வெற்றியைத் தீர்மானிக்கும் கதாநாயகர்களாக வலம் வந்த தேர்தல் அறிக்கைகள் இப்போது வெத்து வேட்டுகளாக மாறி மக்களிடம் நம்பிக்கையை இழந்து நிற்கின்றன.

வீடு தோறும் வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டம், ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை, கல்விக் கடன் தள்ளுபடி , விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் போன்ற கவர்ச்சிகரமான தேர்தல் கால அறி விப்புகள் ஒரு காலத்தில் தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பவையாக இருந்தன.

இப்படி அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் பல காலப்போக்கில் காற்றில் பறக்க விடப்பட்டன. 2021 தேர்தலின்போது திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகள் இருந்தன.






இவற்றில் 75 சதவீதம் மட்டுமே கடந்த 5 ஆண்டுகளில் செயல்படுத்த அவர்களால் முடிந்தது. கிருஷ்ணகிரியில் தோட்டக்கலை பல்கலைக்கழகம், மதுரையில் வேளாண்மை பல்கலைக்கழகம் போன்ற அறிவிப்புகள் தேர்தல் அறிவிப்புகளாக அப்படியே காகிதத்தில் உள்ளன.

நீட் தேர்வை ரத்து செய்து விடுவோம் என்று உறுதி மொழி கொடுத்துவிட்டு ஆட்சிக்கு வந்த திமுகவினர் அதற்காக தலைகீழாக நின்று தண்ணீர் குடித்துப் பார்த்துத் தோற்றுப் போயினர். கவர்னர் உடன் படவில்லை, மத்திய அரசு ஒத்துழைக்கவில்லை என்று திமுகவினர்

காரணம் கூறினாலும் இது ஏற்கெனவே தெரிந்ததுதானே என்று தெரிவித்த அதிமுக, தேர்தல் ஆதாயத்திற்காக மக்களை ஏமாற்றக் கூடாது என்று குற்றஞ் சாட்டியது.

இந்தியாவிலேயே இளம் விதவைகள் தமிழ்நாட்டில் தான் அதிகம் என்று பத்தாண்டுகளுக்கு முன்பு கனிமொழி பேசினார், அப்போது அதிமுக ஆட்சி. 2016 திமுக தேர்தல் அறிக்கையில், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெழுத்து டாஸ்மாக் மதுக்கடைகளை மூடுவதாகத்தான் இருக்கும் என்று கருணாநிதி கூறினார்.

ஜெயலலிதாவும் படிப்படியாக 5 ஆண்டுகளில் பூரண மதுவிலக்கை அமல்படுத்துவேன் என்று வாக்குறுதி அளித்தார். ஆனால், அதிமுக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

பத்தாண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் குடி நோயாளிகளும் விதவைகளும் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். இப்போதோ நிலைமை மிக மோசமாக உள்ளது. இரு கழகங்களுமே பொதுவாக மதுக்கடைகள் பற்றி வாயைத் திறப்பதில்லை. காரணம் அங்கிருந்து வந்து கொட்டும் கள்ளப்பணம் என்பது ஊர் அறிந்த விஷயம்.

வாக்குறுதிகளை அள்ளி வீசுவதில் இந்த இரண்டு கட்சிகளையும் மிஞ் சிவிட்டார் த.வெ.க. தலைவர் விஜய்.

மகளிர் உரிமைத்தொகையை திமுகவும் அதிமுகவும் ரூபாய் 2000 ஆக உயர்த்தி அறிவித்துள்ளனர். விஜய் ஒரு படி மேலே போய் ரூபாய் 2500 என்று அறிவித்துள்ளார்.

தமிழக அரசின் போக்குவரத்து துறை ஏற்கெனவே நொந்து நூலாகிப் போய் உள்ளது. உடலை வருத்தி வேலை பார்த்துவிட்டு ஓய்வு பெறும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு கொடுக்க அரசிடம் பணம் இல்லை.

2011 அதிமுக தேர்தல் அறிக்கையில், உள்ளூர் பேருந்துகளில் மூத்த குடிமக்களுக்கு இலவசம் என்று ஜெயலலிதா அறிவித்தார். அந்த வாக்குறுதியை அவர் நான்கரை ஆண்டுகள் கழித்து 2016 தேர்தல் நெருங்கும் சமயத்தில் நிறைவேற்றினார்.

ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சியில் பெண்கள் அனைவருக்கும் குறிப்பிட்ட பேருந்துகளில் இலவச பயணம் அனுமதிக்கப்பட்டது.

நாங்கள் வெற்றி பெற்றால், பெண்களைப் போல ஆண்களுக்கும் இலவச பயணம் அனுமதிக்கப்படும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இன்னும் ஒரு படி மேலே போய் அனைத்துப் பேருந்துகளிலும் பெண்கள்

இலவசமாக பயணிக்கலாம் என்று விஜய் அறிவித்துள்ளார்.

சென்னை மாநகரத்தில் புதிதாக ஓடிக்கொண்டிருக்கும் மின் பேருந்துகளில் பணியமர்த்தப்பட்டு இருக்கும் ஓட்டுநர்கள் நடத்துநர்கள் தினக்கூலி பணியாளர்கள் ஆவர். நிரந்தர வேலைக்கு ஆள் எடுக்காததால்

ஏற்கெனவே உள்ள நிரந்தரப் பணியாளர்கள் பணிச்சுமையுடனும் மனவேதனையுடனும் பணி புரிகின்றனர். இந்த லட்சணத்தில்தான் போக்குவரத்து துறை ஓடிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் தற்போதைய கடன் ரூ.11 லட்சம் கோடி ஆகும்.

போக்குவரத்து துறையும் மின்சாரத் துறையும் நொந்து நூலாகிக் கிடக்கின்றன. அரசியல் ஆதாயத்திற்காக அனைத்து கட்சிகளிடமும் அடிவயிற்றில் அதிகக் குத்துவாங்கும் துறைகள் இவைதான்.

குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு ரூபாய் 8000 கூப்பன் வழங்கப்படும்

என்று ஸ்டாலின் அறிவித்துள்ளார். ரூபாய் 10 ஆயிரம் கருணைத் தொகை, மூன்று சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் ஃப்ரிட்ஜ் வழங்கப்படும் என்று எடப்பாடி அறிவித்துள்ளார்.

6 சிலிண்டர் வழங்கப்படும், திருமணமாகும் பெண்ணுக்கு ஒரு சவரன் தங்கம், பட்டுப் புடவை, பிறக்கும் குழந்தைக்கு தங்க மோதிரம் என்று

விஜய் வாக்குறுதிகளை வாரி வழங்கி உள்ளார். அவர் அள்ளி விடுவதைப் பார்த்தால் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும், ஜெயித்த பிறகு மற்றதை பார்த்துக் கொள்ளலாம் என்கிற தொனிதான் தெரிகிறது.

இலவசங்களை அறிவிக்காத ஒரே கட்சி நாம் தமிழர் கட்சி தான்.

கடந்த காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும் அவை எப்படி நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும் பூரணமாக அறிந்துள்ள தமிழக மக்களுக்கு, இப்போதைய தேர்தல் அறிக்கைகளை தங்கள் காதுகளில் சுற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள காகிதப் பூக்களாகத்தான் பார்க்கிறார்கள்.

இரண்டு திராவிட கட்சிகளைப் போல அல்லாமல், “நான் இலவசங்களை வழங்க மாட்டேன், தொலைநோக்குத் திட்டங்களை நிறைவேற்றி உங்களுக்கு சிறந்த எதிர்காலத்தை கொடுப்பேன்” என்று விஜய் கூறியிருந்தால் மக்களின் வரவேற்புக்கு ஆளாகி இருப்பார், அந்த வாய்ப்பையும் அவர் நழுவ விட்டுவிட்டார்.

பெரும் கடன் சுமையால் திவாலை நோக்கி சென்று கொண்டிருக்கும் ஒரு மாநிலம், கைக்கு எட்டிய தூரத்தில் மதுக் கடைகள் அதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் குடும்ப சீரழிவுகள், இருக்கிற அரசு ஊழியர்களுக்கே கொடுக்கப் பணம் இல்லை, அத்தியாவசியமான மருத்துவமனைகளுக்கும், கல்வி நிலையங்களுக்கும் ஒதுக்குவதற்கு போதுமான கையிருப்பு நிதி இல்லை இப்படிப்பட்ட மாநிலத்துக்கு ஏற்ற தேர்தல் வாக்குறுதிகளை கொடுக்காமல், வெற்றி பெற்றால் போதும் அதன் பிறகு மக்கள் முதுகு மேல் சுமையை ஏற்றி வைத்து பார்த்துக் கொள்ளலாம் என்ற நோக்குடன்

வெளியிடப்பட்டுள்ள தேர்தல் அறிக்கைகளை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அரசியல்வாதிகள் நினைக்கலாம்,மக்கள் ஏமாளிகள் என்று இப்படி நினைப்பவர்கள் தான் ஏமாந்து போவார்கள். இதுதான் கடந்த கால வரலாறு.!





# அனல் பறக்கும் தேர்தல் களம்

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்.23-ம் தேதி நடக்க உள்ள நிலையில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. அதிமுக கூட்டணியில் பாஜகவுக்கு 27, பாமகவுக்கு 18, அமமுகவுக்கு 11, தமாகா 5, ஐஜேகேவுக்கு 2, ஜான்பாண்டியனின் தமமுகவுக்கு 1, தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சிக்கு 1 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. கூட்டணியில் யார் யார் எந்த தொகுதியில் போட்டி என்ற விவரத்தை இன்று (மார்ச் 25) சென்னை ராயப்பேட்டையில் நிருபர்கள் சந்திப்பில் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் வெளியிட்டார். அதிமுக கூட்டணி கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் பட்டியல்.

## திமுக கூட்டணி கட்சிகள் 69

| | | |
|---|---|---|
| காங்கிரஸ் | 27. சங்கரன்கோவில் | 4 சீர்காழி (தனி) |
| 1. பொன்னேரி (தனி) | 28. மேலூர் | தே.மு.தி.க. |
| 2. திருபெரும்புதூர் (தனி) | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 1 விருத்தாசலம் |
| 3. சோளிங்கர் | 1. தளி | 2 விருதுநகர் |
| 4. உதகமண்டலம் | 2 திருத்துறைப்பூண்டி (தனி) | 3. தருமபுரி |
| 5. ஈரோடு கிழக்கு | 3. திருவில்லிபுத்தூர் (தனி) | 4 குடியாத்தம் (தனி) |
| 6. அறந்தாங்கி | 4 திருப்பூர் வடக்கு | 5 சேலம் மேற்கு போளூர் |
| 7. கடலூர் | 5 பவானிசாகர் (தனி) | 7 பல்லாவரம் |
| 8. மயிலாடுதுறை | மார்க்சிஸ்ட் | 8 திருத்தணி |
| 9. காரைக்குடி | 1 கீழ்வேளூர் (தனி) | 9 ஓமலூர் |
| 10. சிவகாசி | 2 கந்தர்வக்கோட்டை (தனி) | 10. மைலம் |
| 11. திருவாடனை | 3. பத்மநாபபுரம் | இந்திய யூனியன் முஸ்லிம் லீக் |
| 12. திருவைகுண்டம் | 4. பழனி | 1 பாபநாசம் |
| 13. நாங்குநேரி | 5 திருவொற்றியூர் | 2.வாணியம்பாடி |
| 14. குளச்சல் | விடுதலை சிறுத்தைகள் | கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி |
| 15. விளவங்கோடு | 1.காட்டுமன்னார்கோவில் (தனி) | 1. திருச்செங்கோடு |
| 16. கிள்ளியூர் | 2. செய்யூர் (தனி) | 2. பொள்ளாச்சி |
| 17. வேளச்சேரி | 3 திருப்போரூர் | மனித நேய மக்கள் கட்சி |
| 18. ஊத்தங்கரை (தனி) | 4 அரக்கோணம் (தனி) | 1. நாகப்பட்டினம் |
| 19. துறையூர் (தனி) | 5.திண்டிவனம் (தனி) | 2. மணப்பாறை |
| 20. கவுண்டம்பாளையம் | 6 பெரியகுளம் (தனி) | முக்குலத்தோர் புலிப்படை |
| 21 ஆத்தூர் (தனி) | 7 கள்ளக்குறிச்சி (தனி) | 1. சிவகங்கை |
| 22. பென்னாகரம் | 8 பண்ருட்டி | மனிதநேய ஜனநாயக கட்சி |
| 23. சிங்காநல்லூர் | மதிமு.க. | 1. சிதம்பரம் |
| 24. அம்பாசமுத்திரம் | 1. மொடக்குறிச்சி | எஸ்.டி.பி.ஐ. கட்சி |
| 25. கிருஷ்ணகிரி | 2 மதுரை தெற்கு | 1. நன்னிலம் |
| 26. உசிலம்பட்டி | 3. கடையநல்லூர் | |

| | |
|---|---|
| 1.மயிலாப்பூர் | 15.ராதாபுரம் |
| 2.தளி | 16.நாகர்கோவில் |
| 3.மொடக்குறிச்சி | 17.விளவங்கோடு |
| 4.ஊதகை | 18.ஆவடி |
| 5.அவிநாசி | 19.திருவண்ணாமலை |
| 6.திருப்பூர் தெற்கு | 20.தஞ்சாவூர் |
| 7.கோவை வடக்கு | 21.திருவாரூர் |
| 8.கந்தர்வக்கோட்டை | 22.அறந்தாங்கி |
| 9.புதுக்கோட்டை | 23.மானாமதுரை |
| 10.திருப்பத்தூர் | 24.ராமநாதபுரம் |
| 11.மதுரை தெற்கு | 25.குளச்சல் |
| 12.சாத்தூர் | 26.பத்மநாபபுரம் |
| 13.திருச்செந்தூர் | 27.ராசிபுரம் |
| 14.வாசுதேவநல்லூர் | |



| அமமுக (11 தொகுதிகள்) |
|---|
| 1.பெரியகுளம் |
| 2.மன்னார்குடி |
| 3.திருவையாறு |
| 4.காரைக்குடி |
| 5.திருப்பத்தூர் |
| 6.நாங்குநேரி |
| 7.ஒட்டப்பிடாரம் |
| 8.திருச்சி மேற்கு |
| 9.சைதாப்பேட்டை |
| 10.பூந்தமல்லி |
| 11.மடத்துக்குளம் |



| பாமக (18 தொகுதிகள்) | |
|---|---|
| 1. சேலம் மேற்கு | 10. போளூர் |
| 2. தர்மபுரி | 11. செஞ்சி |
| 3. பென்னாகரம் | 12. விருத்தாசலம் |
| 4. விக்கிரவாண்டி | 13. ரிஷிவந்தியம் |
| 5. சோளிங்கர் | 14. காட்டுமன்னார்கோயில் |
| 6. மயிலாடுதுறை | 15. கீழ்வேளூர் |
| 7. திருப்போரூர் | 16. பெரம்பலூர் |
| 8. உத்திரமேரூர் | 17. சேலம் வடக்கு |
| 9. ஜெயங்கொண்டம் | 18. அம்பத்தூர் |



| புரட்சி பாரதம் |
|---|
| 1. கீழ்வைத்தியனான்குப்பம் |



| தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் |
|---|
| 1. ராஜபாளையம். |



| ஐஜேகே |
|---|
| 1. பல்லாவரம் |
| 2. குன்னம் |



| தமாகா |
|---|
| 1. ஒட்டன்சத்திரம் |
| 2. ஈரோடு மேற்கு |
| 3. ராணிப்பேட்டை |
| 4. கிள்ளியூர் |
| 5. கும்பகோணம் |



இதுபோக எஞ்சிய தொகுதிகளில் (169) அதிமுக நேரடியாக போட்டியிடும் என்று அதிமுக அறிவித்துள்ளது. நடைபெற இருக்கிற 2026 தேர்தலில் அதிமுக யானை பலத்துடன் களம் இறங்குகிறது. கடந்த ஐந்தாண்டுகளாக அதிகாரத்தில் இல்லாத வெறியும், எப்படியும் ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்ற உத்வேகத்துடனும் பணியாற்றி வருகிறது.

இந்த முறை ஆட்சி அமைத்த பிறகு எடப்பாடி பழனிசாமி, ஜெயலலிதாவைப் போல மாறி அதிமுகவை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முயல்வார். தங்கமணி, வேலுமணி, சிவி சண்முகம், கே.பி முனுசாமி போன்றவர்கள் எடப்பாடிக்கு மிரட்டல் கொடுப்பதற்கு முற்றுப்புள்ளி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிமுக அணி இப்படி இருக்க திமுகவும் தனது பலமான கூட்டணியை மேலும் பலமாக்கி களமிறங்கியுள்ளது. தேமுதிகவை கூட்டணிக்குள் கொண்டு வந்துள்ளது.

மொத்தமுள்ள 234 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகளை திமுக ஒதுக்கியுள்ளது. தேமுதிகவிற்கு 10 தொகுதிகளும், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகளும், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா 5 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் மதிமுகவிற்கு 4 தொகுதிகளும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆகியவற்றிற்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதுபோக, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, எஸ்டிபிஐ தலைவர் நெல்லை முபாரக், முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் மற்றும் தமிழர் தேசம் கட்சி தலைவர் கே.கே. செல்வகுமார் ஆகியோருக்கும் தலா ஒரு தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்கள் அனைவருமே உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிடுவார்கள் என்று திமுக அறிவித்துள்ளது. மேலும், மதிமுகவுக்கு ஒதுக்கப்பட்ட 4 தொகுதிகளில் 3-லும், மமக, கொமதேகவுக்கு ஒதுக்கப்பட்ட தலா 2 தொகுதிகளிலும், அந்த கட்சிகள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றன.

எது எப்படியோ, யார் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தாலும் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு தமிழ்நாடு மூச்சுத் திணறப்போவது உறுதி. காரணம், கட்சிகள் அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள். இதை மக்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்றுதான் தெரியவில்லை.



# தனித்து களம்காணும் வேல்முருகனின் நோக்கம் என்ன?



தமிழக அரசியலில் திடீர் திருப்பமாக, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தலைமையில் புதிய அணி உருவாகியுள்ளது.

கடந்த 2021 பேரவைத் தேர்தலில் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு, கடலூர் மாவட்டம் பண்ருட்டி தொகுதியில் தி.வேல்முருகன் வெற்றி பெற்றார். ஆனால், சபாநாயகர் தனக்கு சட்டப்பேரவையில் பேசுவதற்கு போதுமான நேரம் ஒதுக்குவது இல்லை என்று அவர் குற்றம்சாட்டி வந்தார். இந்த முறை தனிச் சின்னம், குறைந்தபட்சம் 2 தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என அவர் திமுகவை வலியுறுத்தி வந்தார்.

வன்னியர்களுக்கான 10.5 சதவீத உள் ஒதுக்கீடு, தமிழக அரசுப் பணிகளில் 100 சதவீதம் தமிழர்களுக்கே முன்னுரிமை, ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்துதல் என்பன உள்ளிட்ட 10 கோரிக்கைகளை திமுக தனது தேர்தல் அறிக்கையில் சேர்க்க வேண்டும் அல்லது உறுதி அளிக்க வேண்டும் என அவர் நிபந்தனை விதித்திருந்தார்.

ஆனால், மீண்டும் ஒரு தொகுதி மட்டுமே ஒதுக்க முடியும் என்று முதல்கட்ட பேச்சுவார்த்தையின்போது திமுக தரப்பில் உறுதிபட தெரிவிக்கப்பட்டதால் வேல்முருகன் அதிருப்தியில் இருந்து வந்தார். இதனிடையே, திமுக கூட்டணியிலிருந்து தமிழக வாழ்வுரிமைக் கட்சி வெளியேறுவதாக வேல்முருகன் அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து, தமிழக வாழ்வுரிமைக் கட்சிதலைமையில்புதிய அணிஉருவாகியுள்ளது. சென்னை கோயம்பேட்டில் உள்ள தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைமை அலுவலகத்தில், வேல்முருகன் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், பேரவைத் தேர்தலை

**ஆளுங்கட்சி சின்னத்தில் நின்று வெற்றி பெற்றால், சட்டசபையில் சுயமாக செயல்பட முடியவில்லை. அரசின் மீது பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் அதுகுறித்து பேச முடிவதில்லை என்பதால் தனித்து செயல்பட வேல்முருகன் முடிவெடுத்துள்ளார். அதற்காக, தனி அணி சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஆனால், தேர்தலில் வெற்றி பெறுவாரா என்பது கேள்விக்குறிதான்.**



முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகள் தங்களுக்கான அரசியல் வாய்ப்புகள், அங்கீகாரம் குறித்து ஆலோசனைகளை நடத்தி வருகின்றன.

இதுவரை திமுக தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு அளித்து வந்த நிலையில், தற்போது பல கட்சிகள் தங்களது அடுத்தகட்ட அரசியல் நிலைப்பாடு குறித்து தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றன. இப்போது கேட்கவில்லை என்றால் அடுத்த 5 ஆண்டுகளுக்கு கேட்க முடியாது.

பல சமூக மற்றும் அரசியல் அமைப்புகளும் தங்களது முடிவுகளை எடுக்கத் தயாராக உள்ளன. பெரிய அரசியல் கட்சிகளான திமுக, அதிமுக, பாஜக போன்றவற்றால் உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற மனநிலை பல சிறு கட்சிகள் மற்றும் சமூக தலைவர்களிடையே நிலவுகிறது.

இதனால், சமூக நீதி, சமத்துவம் மற்றும் தமிழர் வாழ்வுரிமைக்காக புதிய அரசியல் மாற்றத்தை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் மற்றும் சங்கங்களும் இந்த அரசியல் மாற்றத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன.

மேலும் 50-க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் தமிழ் தேசிய அமைப்புகள் தமிழக வாழ்வுரிமைக் கட்சியுடன் இணைந்து செயல்படத் தயாராக உள்ளன.

வரவிருக்கும் தேர்தலில் சமூக நீதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை வளங்கள் காப்பு, மீனவர்கள் மற்றும் பல்வேறு சமூகங்களின் உரிமைகள் ஆகியவற்றை முன்வைத்து அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஆளுங்கட்சி சின்னத்தில் நின்று வெற்றி பெற்றால், சட்டசபையில் சுயமாக செயல்பட முடியவில்லை. அரசின் மீது பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் அதுகுறித்து பேச முடிவதில்லை என்பதால் தனித்து செயல்பட வேல்முருகன் முடிவெடுத்துள்ளார். அதற்காக, தனி அணி சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஆனால், தேர்தலில் வெற்றி பெறுவாரா என்பது கேள்விக்குறிதான். இருந்தாலும், அரசுக்கு எதிராக, உரிமைகளை முன்வைத்து போராடும் சுதந்திரமான ஒரு சமூக கூட்டமைப்பை உருவாக்குவதில் அவர் வெற்றி பெற வாய்ப்புள்ளது.

# தேர்வுப்பணி ஒதுக்கீட்டில் முறைகேடு புகார்

# துணை ஆய்வாளர் மீது சரமாரி குற்றச்சாட்டு

இடைநிலை பொதுத்தேர்வு (SSLC) பணிகளுக்கான ஆணை வழங்கியதில், இராணிப்பேட்டை மாவட்ட கல்வி அலுவலகத்தில் (இடைநிலை) பெரும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக எழுந்துள்ள புகார்கள் கல்வித்துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

மாவட்டக் கல்வி அலுவலர் முன்னிலையில் நடைபெறவேண்டிய தேர்வுப்பணி ஒதுக்கீடுகளை, பள்ளி துணை ஆய்வாளர் செந்தில் குமார் தன்னிச்சையாக மேற்கொண்டதாக கூறப்படுகிறது. இதற்காக அவர் தனக்கென ஒரு ரகசியக் குழுவை அமைத்து, தேர்வு மைய கண்காணிப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்களை தேர்வு செய்ததாக புகார்கள் எழுந்தன.

குறிப்பாக, அலுவலகத்தில் "அ" பிரிவில் இருந்த தேர்வுப்பணி இருக்கையை (Seat), தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் மற்றொரு அறைக்கு மாறியதாகவும், அங்கு ரகசியமாக பணிகள் நடைபெற்றதாகவும் ஆசிரியர்கள் குற்றம்சாட்டினர்.

தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுடன் கைகோர்த்து, தங்களுக்குச் சாதகமான ஆசிரியர்களை குறிப்பிட்ட மையங்களில் பணியமர்த்த ரூ.3,000 முதல் ரூ.5,000 வரை வசூலிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

வெளிப்படைத்தன்மைக்கான "லாட்" (குலுக்கல்) முறை பின்பற்றப்படுவதாகக் காட்டிக்கொண்டாலும், உண்மையில் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு பணி ஆணைகளை முன்பே ஒதுக்கிவிட்டு, மீதமுள்ள இடங்களுக்கு மட்டும் குலுக்கல் முறையை ஒரு கண்துடைப்பாக பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்படுகிறது. ஒருபுறம் முறைகேடு புகார்கள் வெடிக்க, மறுபுறம் தொடக்கக் கல்வித்துறை ஆசிரியர்கள் பொதுத் தேர்வுப் பணியில் ஈடுபட பலத்த எதிர்ப்பு தெரிவித்தனர்.

முன்னெப்போதும் இல்லாத வகையில், தொடக்கக் கல்வித் துறையின் கீழ் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி தேர்வு மையக் கண்காணிப்பாளர் பணி வழங்கப்பட்டது. இப்புதிய நடைமுறை குறித்து ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படவில்லை.

முறையான பணியாளர் விவரங்களை சரிபார்க்காமல் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் தேர்வு பணி ஒதுக்கீடு, தேர்வின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. எனவே, தமிழக அரசு மற்றும் தேர்வுத்துறை இயக்ககம் உடனடியாக தலையிட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர் செல்போன் உரையாடல்களை ஆய்வு செய்து, முறைகேடுகள் குறித்து விரிவான விசாரணை நடத்த வேண்டும் என ஆசிரியர்கள் வலியுறுத்தினர்.



# மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நிறைவு





மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு சோதனை நடத்தப் பட்டு, அதன் முடிவுகள், மத்தியஸ்தராக நியமிக்கப் பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதிபதி பி.என். பிரகாஷ் முன், சீல் வைத்த கவரில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக, வழக்க றிஞர் ஆணையர் தெரிவித்தார்

சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்தப்பட்டு, முடிவுகள் சீல் வைத்த கவரில் மத்தியஸ்தர் நீதிபதி பி.என். பிரகாஷிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, வழக்கறிஞர் ஆணையர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

திருமணம் செய்து ஏமாற்றி விட்டதாக, சமையல் கலைஞர் மாதம்பட்டி ரங்கராஜுக்கு எதிராக, ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா, சமூக வலைதளங்களில் பதிவிட்ட பதிவுகளில், மாதம்பட்டி பாகசாலா நிறுவனத்தையும் இணைத்திருந்தார்.

இதை எதிர்த்து மாதம்பட்டி பாகசாலா நிறுவனம் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், இந்த விவகாரம் தொடர்பாக, மாதம்பட்டி ரங்கராஜ் – ஜாய் கிரிசில்டா இடையில் மத்தியஸ்தம் செய்ய உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி பி.என். பிரகாஷ்-ஐ மத்தியஸ்தராக நியமித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையின்போது, தனது குழந்தையின் தந்தை மாதம்பட்டி ரங்கராஜ் என நிரூபிக்க, அவருக்கு மரபணு சோதனை நடத்தப்பட வேண்டும் என ஜாய் கிரிசில்டா தரப்பிலும், மரபணு சோதனைக்கு தயார் என மாதம்பட்டி ரங்கராஜ் தரப்பிலும் தெரிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக இரு தரப்பிலும் மனுத்தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, சென்னை ராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தடயவியல் துறையையும், ஆய்வகத்தையும் தொடர்பு கொண்டு, மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு பரிசோதனை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக, வழக்கறிஞர் டி. ஹேமலதா என்பவரை வழக்கறிஞர் ஆணையராக நியமித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் மீண்டும் விசாரணைக்கு வந்த போது, ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மாதம்பட்டி ரங்கராஜுக்கு மரபணு சோதனை நடத்தப்பட்டு, அதன் முடிவுகள், மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதிபதி பி.என்.பிரகாஷ் முன், சீல் வைத்த கவரில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக, வழக்கறிஞர் ஆணையர் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் மத்தியஸ்த நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மாதம்பட்டி ரங்கராஜ், ஜாய் கிரிசில்டா தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, வழக்கின் விசாரணையை, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி, ஜூன் 8-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

# தமிழ்நாடு மக்கள் பதிலடி தருவார்கள்

# பாஜக அரசுக்கு எதிராக திமுக எம்.பி. வில்சன் ஆவேசம்



தமிழ்நாட்டுக்கு போதிய நிதி ஒதுக்காமல் திண்டாட வைத்ததற்காக வரும் தேர்தலில் மத்திய பாஜக அரசுக்கு தமிழ்நாடு மக்கள் பதிலடி கொடுப்பார்கள் என நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிதி மசோதா மீதான விவாதத்தில் திமுக எம்.பி. பி.வில்சன் எச்சரித்தார்.

நாடாளுமன்ற 2026-2027 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத்தொடர் ஜன.31-ம் தேதி தொடங்கியது. பட்ஜெட் மீதான விவாதம் பிப்.11-ம் தேதி முடிந்த நிலையில், மார்ச் 9 முதல் இரண்டாம் கட்ட விவாதம் தொடங்கியது. அப்போது மாநிலங்களவையில் திமுக எம்.பி. பி.வில்சன் உரையாற்றினார்.

இந்தியா நாடே வேலையில்லா நெருக்கடியை சந்தித்து வருகிறது. சர்வதேச தரவுகளின்படி 83% இளைஞர்கள் வேலைவாய்ப்பற்று இருப்பது என்பது மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. 29 வயது வரை உள்ள பட்டதாரிகளின் வேலையின்மை அதிகமாக உள்ளது. "யுவசக்தி" போன்ற முழக்கங்கள் வேலைகளை உருவாக்காது. வேலைவாய்ப்பற்றவர்களுக்கு இந்த நிதி மசோதா என்ன செய்துள்ளது? இந்தியாவின் 90% க்கும் அதிகமான தொழிலாளர்களை பணியமர்த்தும் அமைப்புசாரா துறையினருக்கு நியாயமான பாதுகாப்பு இல்லை.



2014-ல் இருந்து அம்பானியின் சொத்து மதிப்பு 500%-மும், அதானியின் சொத்து 1,000%-க்கு மேலும் அதிகரித்துள்ளது என்று கூறப்படும் நிலையில், உலக பசி குறியீட்டில் இந்தியா

என் வார்த்தைகளைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள், மத்திய அரசு நடந்துகொண்ட அதே விதத்தில்தான் தமிழ்நாட்டு மக்களும் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில் உங்களுக்குப் பதிலடி கொடுப்பார்கள். மே 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் மத்திய பாஜக அரசுக்கு எதிரான தங்கள் தீர்ப்பை வழங்கும்போது, அதன் விளைவுகளை உணர்ந்துகொள்வீர்கள்.



52-வது இடத்தில் இருந்து 102-வது இடத்திற்கு சரிந்துள்ளது. வருமான சமத்துவமின்மையை நிவர்த்திசெய்வதற்கும், தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்கும் நிதி மசோதா என்ன செய்கிறது? பெரும் பணக்காரர்களுக்கு வரி விதிக்குமா? செல்வ வரியை அறிமுகப்படுத்துகிறதா? பரம்பரை வரி விதிக்கிறதா? இது மறுபகிர்வு செய்ய முயற்சிக்கிறதா? என்றால் எதுவுமே இல்லை. ஆனால் பல்வேறு வரிகளில் நிறுவனங்களுக்கு சலுகைகளை வழங்கி வருகிறது.



கடந்த ஆண்டை விட நலத்திட்ட செலவுகள் ரூ. 59,456 கோடி குறைக்கப்பட்டுள்ளது. ஏழைகளை ஆதரிக்கும் திட்டங்களான விநிழிஸிணிநிகி, PMAY, PMJAY, PM POSHAN, பயிர் காப்பீடு ஆகிய அனைத்தும் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளன. உர மானியம் குறைந்துள்ளது. உணவு மானியம் குறைக்கப்படுகிறது.

ஆண்டுக்கு சுமார் 31 மில்லியன் டன்கள் நுகர்வு உள்ள எல்பிஜி பற்றாக்குறையை போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன? எரிசக்தி ஆதாரங்களை திறமையாக பல்வகைப்படுத்துவதில் அரசாங்கம் தவறி விட்டது.

நடுத்தர மக்களின் வருமானத்தில் தேக்கம், சேமிப்பில் சுருக்கம், என்பதுதான் மத்திய பாஜக அரசின் வெற்றிக் கதை. இந்த ஆட்சியில் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக மாறுகிறார்கள். தனது சொந்த நிதியமைப்பே முற்றிலும் சீர்குலைந்த நிலையில் வைத்துள்ளது மத்திய அரசு. நாட்டின் கடன் மீதான மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 55.6% என்ற வியக்க வைக்கும் அளவில் இருக்கும் நிலையில், தமிழ்நாடு 26.12%-ஐ மட்டுமே கொண்டுள்ளது.

நிதி மேலாண்மை என்பதை ஆழமாக ஆராய்ந்தால் மத்திய அரசு சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும், கிட்டத்தட்ட 38% என்கிற, ரூ.14.04 லட்சம் கோடி, வளர்ச்சி, சுகாதாரம், கல்வி அல்லது வேலை உருவாக்கம் ஆகியவற்றுக்கு வட்டியாக செலுத்தப்படுகிறது.

மத்திய அரசின் மொத்தக் கடன் 2022-23ல் ரூ.156.13 லட்சம் கோடியாக இருந்த நிலையில், 2023-24ல் ரூ.171.70 லட்சம் கோடி, 2024-25ல் ரூ.185.95 லட்சம் கோடி, 2025-26ல் ரூ.200.53 லட்சம் கோடி என 4 ஆண்டுகளில், ரூ.62 லட்சம் கோடிக்கு மேல் என விரிவடைந்து, 40%





அதிகரித்துள்ளது.

இந்தியாவின் நிதிக் கூட்டாட்சி அமைப்பினால், தமிழ்நாட்டிலிருந்து 2022–23ல் ரூ.1,75,088 கோடி, 2023–24ல் ரூ. 2,07,314 கோடி, 2024–25ல் ரூ. 2,17,165 கோடி என மொத்தம் ரூ. 5,99,567 கோடி வரி வருவாயை வசூலித்தும், ஒதுக்கப்பட்ட நிதி என்பது 2022–23ல் ரூ. 38,731 கோடி, 2023–24ல் ரூ. 46,072 கோடி, 2024–25ல் ரூ. 52,492 கோடி என மொத்தம் ரூ. 1,37,295 கோடியாக மட்டுமே இருந்துள்ளது. தமிழ்நாட்டிலிருந்து ஒரு ரூபாய் வரி வருவாயில், மாநிலத்துக்கு ஒதுக்கக்கூடிய நிதி என்பது 23 பைசாவாக மட்டுமே உள்ளது.

இதை நிதி அநீதி என்று சொல்வதே சிறந்தது என்பது, மற்ற மாநிலங்களுடனான ஒப்பீட்டில் காட்டப்படும் ஏற்றத்தாழ்விலிருந்தே தெரியவரும்.அதே மூன்றாண்டு காலத்தில், உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்த வருவாய் ஒரு ரூபாய் என்றால், ஒதுக்கப்பட்ட நிதி ரூ.1.66–ஆக உள்ளது. இதேபோல பீகாரிலிருந்து வரும் வருவாய் ஒரு ரூபாய் என்றால், ஒதுக்கக் கூடிய நிதி ரூ. 6.90–ஐ திரும்பப்பெறுகிறது.

இந்தியாவின் வலிமையான பொருளாதார பங்களிப்பாளர்களில் ஒன்றாகவும், தேசிய வரி வருவாயை உருவாக்குபவராகவும் இருக்கும் தமிழ்நாடு, ஒரு பகுதியை மட்டுமே பெறும் நிலையில், மிகக் குறைவான பங்களிப்பை வழங்கும் பல மாநிலங்கள் அதிக அளவில் பலன்பெறுகின்றன. கூட்டுறவுக் கூட்டாட்சிக் கொள்கைக்கு உண்மையான அர்த்தம் இருக்க வேண்டும் என்றால், மத்திய அரசு இந்த அப்பட்டமான வேறுபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும்.

தமிழகத்திற்கு வழங்க வேண்டிய பல்வேறு திட்டங்களுக்கான நிதியில் ரூ. 10,000 கோடிக்கு மேல் ஒன்றிய அரசு பாக்கி வைத்துள்ளது. ஜல் ஜீவன் மிஷன் திட்டத்திலும் ரூ. 5,914 கோடியை விடுவித்து இருந்தாலும், இன்னும் ரூ.3,112 கோடி நிலுவையில் உள்ளது

என் வார்த்தைகளைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள், மத்திய அரசு நடந்துகொண்ட அதே விதத்தில்தான் தமிழ்நாட்டு மக்களும் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில் உங்களுக்குப் பதிலடி கொடுப்பார்கள். மே 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் மத்திய பாஜக அரசுக்கு எதிரான தங்கள் தீர்ப்பை வழங்கும்போது, அதன் விளைவுகளை உணர்ந்துகொள்வீர்கள்.

இவ்வாறு நிதி மசோதா மீதான விவாதத்தில், மூத்த வழக்கறிஞரும், திமுக–வை சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினருமான பி.வில்சன் நாடாளுமன்றத்தில் உரையாற்றி உள்ளார்.

# தைராய்டு பிரச்சினைகள்

# ஹோமியோபதி சிகிச்சை

★ உடல் சமநிலையை மீட்டெடுக்கும் ஒரு மென்மையான அணுகுமுறை

★ அறியாமலே ஆரம்பிக்கும் மாற்றங்கள்




“சாப்பிடுவது குறைவு தான், ஆனாலும் எடை ஏறிக்கொண்டே போகுது!”, “எப்போதும் சோர்வு”, “சின்ன விஷயத்திற்கே எரிச்சல் வருகிறது” - இவ்வாறான மாற்றங்களை பலர் அனுபவித்தாலும், அவை பெரும்பாலும் கவனிக்கப்படாமல் போகின்றன. ஆனால் இந்தச் சிறிய மாற்றங்களே, உடலின் உள்ளே நடைபெறும் ஒரு முக்கிய சீர்கேட்டின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம்.

குறிப்பாக, தைராய்டு சுரப்பியின் செயல்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் இவ்வாறு மெதுவாக வெளிப்படுகின்றன. இன்றைய வாழ்க்கை முறையில் மன அழுத்தம், தவறான உணவு பழக்கம், தூக்கமின்மை ஆகியவை அதிகரித்து வருவதால், தைராய்டு பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பெண்களிடையே இது அதிகமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

### தைராய்டு - ஒரு சிறிய சுரப்பி, பெரிய பணி

நமது கழுத்தின் முன்பகுதியில் இருக்கும் தைராய்டு சுரப்பி, பட்டாம்பூச்சி வடிவில் காணப்படும் ஒரு சிறிய உறுப்பாகும். அதன் அளவு மிகச் சிறியதாக இருந்தாலும், அதன் பணி மிகவும் முக்கியமானது. இந்த சுரப்பி உருவாக்கும் ஹார்மோன்கள் உடலின் பல முக்கிய செயல்பாடுகளை கட்டுப்படுத்துகின்றன.

நாம் எடுத்துக்கொள்ளும் உணவை ஆற்றலாக மாற்றுவது, இதயத்தின் துடிப்பை ஒழுங்குபடுத்துவது, உடல் வெப்பநிலையை கட்டுப்படுத்துவது, செரிமானத்தை சீராக வைத்திருப்பது போன்ற அனைத்திலும் இந்த ஹார்மோன்களின் பங்கு உள்ளது. மேலும், மனநிலையையும் இது பாதிக்கக்கூடியது. ஆகவே தைராய்டு சுரப்பி சீராக இயங்கவில்லை என்றால், அதன் தாக்கம் உடல் முழுவதும் உணரப்படும்.

### தைராய்டு கோளாறுகள் எப்படி வெளிப்படும்?

தைராய்டு சுரப்பி குறைவாக செயல்படும் நிலையில், உடலின் இயல்பு மெதுவாக மாறத் தொடங்குகிறது. காரணமில்லாமல் எடை அதிகரிப்பது, எப்போதும் சோர்வாக இருப்பது,

மனச்சோர்வு ஏற்படுவது, முடி அதிகமாக கொட்டுவது, சருமம் வறண்டு போவது, பெண்களிடம் மாதவிடாய் சீர்கேடு ஏற்படுவது போன்ற மாற்றங்கள் இதன் வெளிப்பாடாக இருக்கும்.

இதை பலர் சாதாரண பிரச்சினை என நினைத்து புறக்கணிப்பதும் வழக்கமாக உள்ளது. அதே நேரத்தில், சிலருக்கு தைராய்டு சுரப்பி அதிகமாக செயல்படும் நிலையும் காணப்படுகிறது. இந்த நிலையில் எடை குறைதல், அதிக பசி, இதயத் துடிப்பு வேகமாக உணரப்படுதல், பதற்றம் மற்றும் கவலை அதிகரித்தல், கைகளில் நடுக்கம் மற்றும் அதிக வியர்வை போன்ற அறிகுறிகள் தோன்றும்.

இவ்வாறு, தைராய்டு பிரச்சினை உடலின் செயல்பாட்டை முழுமையாக மாற்றக்கூடியதாகும். ஏன் தைராய்டு பிரச்சினை உருவாகிறது? தைராய்டு கோளாறு ஒரு காரணத்தால் மட்டும் ஏற்படுவதில்லை; பல காரணங்கள் இணைந்து இதை உருவாக்குகின்றன. இன்றைய வாழ்க்கை முறையில் மன அழுத்தம் மிக முக்கியமான காரணமாக உள்ளது.

தொடர்ந்து மன அழுத்தத்தில் இருப்பது ஹார்மோன் சமநிலையை பாதிக்கிறது. அதோடு, சத்துக்கள் குறைந்த உணவு பழக்கம் மற்றும் அதிகமாக பதப்படுத்தப்பட்ட உணவுகளை எடுத்துக் கொள்வது உடலின் இயல்பான செயல்பாட்டை குறைக்கிறது. தூக்கமின்மையும் இதற்கு முக்கிய காரணமாகும்; ஆழ்ந்த உறக்கம் இல்லாததால் ஹார்மோன் சுரப்பு சீராக நடைபெறாது.

மேலும், குடும்பத்தில் ஏற்கெனவே தைராய்டு பிரச்சினை இருந்தால் அதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். சுற்றுச்சூழல் மாற்றங்கள் மற்றும் வாழ்க்கை முறையின் வேகமும் இதனை பாதிக்கின்றன.



## ஹோமியோபதி - உடலை முழுமையாக பார்க்கும் சிகிச்சை

ஹோமியோபதி சிகிச்சை, நோயின் அறிகுறிகளை மட்டும் கவனிப்பதல்ல; நோயாளியின் முழுமையான நிலையைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறது.

தைராய்டு பிரச்சினையில், ஹார்மோன் அளவுகளை மட்டும் சரிசெய்வதற்குப் பதிலாக, உடலின் இயல்பான சமநிலையை மீட்டெடுப்பதே இதன் நோக்கமாகும். ஒவ்வொரு நபரின் உடல் தன்மை, மனநிலை, வாழ்க்கை முறை ஆகியவை வேறுபட்டவை என்பதால், அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையும் தனித்துவமானதாக இருக்கும். இந்த அணுகுமுறை, தைராய்டு சுரப்பியை இயல்பாக மீண்டும் செயல்படத் தூண்டுகிறது. இதனால், உடல் முழுவதும் மெதுவாக சீராகும்.

## சிகிச்சையின் நடைமுறை - மெதுவான ஆனால் ஆழமான மாற்றம்

ஒரு ஹோமியோபதி மருத்துவர் நோயாளியை அணுகும் போது, அவரின் உடல் அறிகுறிகள் மட்டுமல்லாமல், மனநிலை, உணவு விருப்பம், தூக்க பழக்கம் போன்ற பல அம்சங்களையும் கவனிக்கிறார். இந்த முழுமையான ஆய்வின் அடிப்படையில் மருந்து வழங்கப்படுவதால், சிகிச்சை ஆழமாக செயல்படுகிறது. ஆரம்பத்தில் சோர்வு குறைவது, மனநிலை சீராகுவது போன்ற மாற்றங்கள் தோன்றும். அதன் பின்னர், உடலின் செயல்பாடுகள் படிப்படியாக இயல்பிற்கு திரும்பத் தொடங்கும். தைராய்டு ஹார்மோன்

## முக்கிய அறிவுரை

நீங்கள் ஏற்கெனவே வேறு மருத்துவ முறையில் மருந்து எடுத்துக் கொண்டிருந்தால் அதை திடீரென நிறுத்துவது தவறு. மருத்துவரின் ஆலோசனையுடன் மட்டுமே மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.



அளவுகளும் மெதுவாக சீராகும். இந்த மாற்றம் திடீரென அல்ல; ஆனால் நிலையானதாக இருக்கும்.

### ஒரு அனுபவம் ஒரு நம்பிக்கை

திருமணத்திற்கு பிறகு திடீரென உடல் எடை அதிகரித்து, எப்போதும் சோர்வாக இருந்த ஒரு இளம் பெண், தொடர்ந்து மனஅழுத்தத்தாலும் பாதிக்கப்பட்டார். பரிசோதனையில் தைராய்டு குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டது. ஹோமியோபதி சிகிச்சையில், அவரது உடல்நிலை மட்டுமல்லாமல், மனநிலையும் கவனிக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு, அவரது சோர்வு குறைந்து, மனநிலை சீராகி, தைராய்டு அளவுகளும் முன்னேற்றம் காணத் தொடங்கின.

இது ஹோமியோபதி சிகிச்சையின் மெதுவான ஆனால் ஆழமான செயல்பாட்டை வெளிப்படுத்துகிறது. வாழ்க்கை முறையில் மாற்றம் – சிகிச்சைக்கு துணை தைராய்டு சிகிச்சையில் மருந்துகளுக்கு இணையாக வாழ்க்கை முறையும் முக்கிய பங்கு வகிக்கிறது. சத்துக்கள் நிறைந்த உணவு, குறிப்பாக அயோடின் மற்றும் செலினியம் உள்ள உணவுகளைச் சேர்த்துக்கொள்வது அவசியம். தினசரி நடைப்பயிற்சி உடலின் செயல்பாட்டை மேம்படுத்தும். மன அழுத்தத்தை குறைக்க தியானம் அல்லது யோகா உதவும்.

அதேபோல், சரியான நேரத்தில் நல்ல தூக்கம் பெறுவது ஹார்மோன் சமநிலையை பராமரிக்க மிகவும் முக்கியமானது. இவ்வாறான எளிய பழக்கங்கள் சிகிச்சையின் பலனை அதிகரிக்கின்றன.

### முடிவாக நம்பிக்கையுடன் முன்னேறுங்கள்

தைராய்டு என்பது பயப்பட வேண்டிய நோயல்ல; அதை சரியாகப் புரிந்து கொண்டு, சரியான முறையில் அணுகினால் கட்டுப்படுத்தக்கூடிய நிலை. நேரத்தில் கண்டறிதல், முறையான சிகிச்சை மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை ஆகியவை இணைந்தால், நல்ல மாற்றம் நிச்சயம் ஏற்படும்.

ஹோமியோபதி சிகிச்சை உடலின் உள்ளார்ந்த சக்தியை தூண்டி, சமநிலையை மீட்டெடுக்கும் ஒரு மென்மையான வழிமுறையாகும். நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் சிகிச்சையைத் தொடர்ந்தால், ஆரோக்கியமான வாழ்வு எளிதில் அடையலாம்.

## தமிழகத்தின் பெரிய சட்டமன்ற தொகுதி

# சோழிங்கநல்லூர்

### ஒரு பார்வை





தமிழகத்தின் அதிக வாக்காளர்களைக் கொண்ட மிகப்பெரிய சட்டப்பேரவை தொகுதி செங்கல்பட்டு மாவட்டத்திற்கு உட்பட்ட சென்னை அருகே உள்ள சோழிங்கநல்லூர் தொகுதியாகும். முன்பு தாம்பரம் தொகுதியின் ஒரு பகுதியாக இருந்த இப்பகுதி 2011ல் தனித்தொகுதியாக உருவானது.

இந்த தொகுதியில் உள்ளகரம், புழுதிவாக்கம் நகராட்சிகளும் பள்ளிக்கரணை, பெருங்குடி சோழிங்கநல்லூர் பேரூராட்சிகளும் உள்ளன.

கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், உத்தண்டி, செம்மஞ்சேரி, காரப்பாக்கம், ஒக்கியம், துரைப்பாக்கம், ஜல்லடியான்பேட்டை, மடிப்பாக்கம் போன்ற 10 ஊராட்சிகளும் சென்னை மாநகராட்சியோடு இணைந்துள்ளன. 14வது 15 வது மண்டலத்தின் 20 வார்டுகளும் இடம் பெற்றுள்ளன.

சென்னையை ஒட்டி ஓஎம்ஆர் சாலையில் அமைந்துள்ள சோழிங்கநல் லூரில் ஏராளமான தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலம், பொறியியல் கல்லூரிகள், உலகளாவிய திறன் மையங்கள் என பலதரப்பட்ட நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

தொகுதியில் இருந்து வெளியேறும் அனைத்து கழிவுநீரும் பாதாள சாக்கடை திட்டம் மூலமாக வெளியேற்றப்படாமல் ஏரிகளில் கலக்கின்றது. இதற்கு உரிய தீர்வுகாண வேண்டும் என்று தொகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள ஓ.எம். ஆர். சாலை சுங்கச்சாவடிகளை அகற்ற வேண்டும் என்பது மற்றொரு முக்கிய கோரிக்கையாக இருக்கிறது. சோழிங்கநல்லூர் தொகுதியில்

ரியல் எஸ்டேட் விலை கொடிகட்டி பறக்கும் மிகவேகமாக வளர்ந்து வரும் பகுதி என்பதாலும், முக்கிய விஜபிக்கள் உலவும் ஓஎம்ஆர், கிழக்கு கடற்கரை சாலை ஆகிய பகுதிகள் இங்கு வருவதாலும், சோழிங்கநல்லூர் தொகுதி முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.



மாநகராட்சியில் வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை இல்லை. இதனால் கழிவு நீர் வெளியே செல்ல முடியாமல் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. இதற்கு விரைவிர் தீர்வு காண வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். வடநெமிலியில் இருந்து கடல் நீர் குடிநீர் திட்ட குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவற்றை சரிவர சீரமைக்காமல் சாலைகள் பழுதடைந்து கிடக்கின்றன. அவற்றை சீர் செய்ய வேண்டும் என்பது முக்கிய கோரிக்கையாக உள்ளது.

2011ல் நடைபெற்ற தேர்தலில் அதிமுகவின் கே.பி.கந்தன் வெற்றி பெற்று தொகுதியின் முதல் சட்டப்பேரவை உறுப்பினர் என்ற பெயரைப் பெற்றார். அதிமுக சார்பில் மீண்டும் தற்போது களமிறக்கப்பட்டுள்ளார்.

தொகுதிக்குள்ளும், கட்சிக்குள்ளும் தனிப்பட்ட செல்வாக்கும் மக்கள் மத்தியில் நல்ல அறிமுகமும் கொண்டவராக விளங்குவது கே.பி.கந்தனின் பலமாகும். அதிமுக தலைமை யிடமும் அவருக்கு செல்வாக்கு இருப்பதால் தொகுதிக்கு தேவையான வசதிகளை விரைந்து முடித்து தருவார் என்று அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர். தொகுதி முழுவதும் 2021 தேர்தலில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய அவர் இந்த முறை வெற்றியை தொட்டுவிட வேண்டும் என்ற வேகத்தில் மக்களை சந்தித்து தீவிரமாக வாக்கு சேகரித்தார்.

அவரை எதிர்த்து திமுக சார்பில் சிட்டிங் எம்எல்ஏ எஸ்.அரவிந்த் ரமேஷ் களமிறங்கியுள்ளார். தொடர்ந்து இரண்டு முறை இந்த தொகுதியில் வென்று எம்எல்ஏ ஆன இவர், இந்த முறையும் வென்று ஹாட்ரிக் அடித்துவிட வேண்டும் என்ற முனைப்பில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

திமுக வேட்பாளரும், அதிமுக வேட்பாளரும் மனுதாக்கல் செய்யும்போது ஒருவருக்கு ஒருவர் நேரில் சந்தித்து புன்னகையோடு கை கொடுத்து வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். இருவரும் போட்டியை மறந்து வாழ்த்துகள் கூறி நலம் விசாரித்துக் கொண்டனர்.

அதிமுக கொடுத்துள்ள கவர்ச்சிகரமான தேர்தல் வாக்குறுதிகளோடு, திமுக ஆட்சியில் நிறைவேற்றப்படாமலும், ஆமை வேகத்திலும் நடைபெறும் திட்டங்களை சுட்டிக்காட்டி கே.பி.கந்தன் வாக்குசேகரிப்பில் ஈடுபட்டார்.

அதேநேரம், திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளோடு, தொகுதியில் நடைபெற்றுள்ள வளர்ச்சிப் பணிகளை சுட்டிக்காட்டி அரவிந்த் ரமேஷ் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

தவெக வேட்பாளர் ECR P.சரவணமூர்த்தி வீதி வீதியாக சென்றும், துண்டு பிரசுரங்களை வழங்கியும் வாக்கு சேகரித்தார். டீக்கடைகளில் டீ போடுவது, பெட்டிக் கடைகளில் உரிமையாளரிடம் உரிமையுடன் பேசுவது என நூதனமுறையில் வாக்கு சேகரித்தார்.

தவெக தலைவர் விஜயின் வீடு இருக்கும் நீலாங்கரையும், அவரது கட்சி அலுவலகம் உள்ள பனையூரும் இந்த தொகுதிக்கு உட்பட்டு இருப்பதால், ணிசிஸி றி.சரவணமூர்த்திக்கு கட்சி தலைமையின் ஆதரவு இருக்கிறது. நிர்வாகிகளும் துடிப்புடன் தேர்தல் வேலை பார்த்தனர்.

ரியல் எஸ்டேட் விலை கொடிகட்டி பறக்கும் மிகவேகமாக வளர்ந்து வரும் பகுதி என்பதாலும், முக்கிய விஜபிக்கள் உலவும் ஓஎம்ஆர், கிழக்கு கடற்கரை சாலை ஆகிய பகுதிகள் இங்கு வருவதாலும், சோழிங்கநல்லூர் தொகுதி முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. எனவே, இங்கு வெல்லும் வேட்பாளர் கட்சியிலும் ஆட்சியிலும் முக்கிய விஜபியாகவே வலம் வருவார் என்பது மட்டும் உறுதி.

# தனது கட்சியை தானே தோற்கடித்த கமல்!




**பா.ஜோதி நரசிம்மன்**

அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பதில் கொள்கைரீதியாக பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மக்களின் நலன் கருதி கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலை சந்திக்கின்றன. கமல்ஹாசன் கடந்த காலங்களில் திமுக அரசியல் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை பயன்படுத்தி ஒரு புது இயக்கம் காணலாம், அதன் மூலம் மக்களுக்கு சேவை செய்யலாம் என்கிற உரிய நோக்கத்தோடு மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை தொடங்கினார். எல்லா இயக்கங்களும் அப்படிதான் உருவாகின்றன.

தமிழக வெற்றிக் கழகத்தின் பேச்சாளரும் இலக்கியவாதியுமான நாஞ்சில் சம்பத் ஒரு இடத்தில் பேசும்போது, ‘டார்ச் லைட் வெளிச்சத்தில் டிவியை உடைத்தார் கமல், இப்போது அந்த டார்ச் லைட்டை அண்ணா அறிவாலயத்தில் தேடிக் கொண்டிருக்கிறார்’ என்று நகைச்சுவையாக குறிப்பிட்டார்.

அப்படித்தான் இருக்கிறது கமலின் கட்சி தேர்தலில் போட்டியிடும் முடிவு. திமுக கூட்டணிக்கு வெளியிலிருந்து ஆதரவு தெரிவித்துவிட்டு போட்டியிலிருந்து கட்சியை விலக்கிவைத்தார். தான் மட்டும் திமுகவிடம் இருந்து ராஜ்யசபா எம்.பி. பதவியை பெற்றுக்கொண்டார் என்பது வேறுகதை.

தனது கட்சியைச் சேர்ந்த ஒன்றிரண்டு பேரை சட்டமன்ற உறுப்பினர்களாக்கி மக்கள் சேவைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்ற எண்ணம் கமலிடம் இல்லை. கமலின் இந்த மனநிலை அவரை நம்பி வந்தவர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. குறிப்பாக திரைப்பட பாடலாசிரியர் சினேகன் இந்த முறை சட்டமன்ற உறுப்பினர் ஆகிவிடலாம் என்கிற நீண்ட கனவில் இருந்து வந்தார் என்கிறார்கள்.

மொத்தத்தில் தனது கட்சியை தானே தோற்கடித்த ஒரே தலைவன் என்றால் அது கமல்ஹாசனாகத்தான் இருக்க முடியும்.



# நிலவின் ஜோடி உதடுகள்

ஓரியண்டேல் பேசின் (Orientale Basin) என்பது நிலவில் அமைந்துள்ள மிகப்பெரிய மற்றும் மிகவும் அழகான மோதல் பள்ளங்களில் (impact basins) ஒன்றாகும்.

இதன் முக்கிய சிறப்பம்சங்கள்...

**அமைவிப்பு:**

இது நிலவின் பூமியை நோக்கிய பகுதிக்கும் (near side) மற்றும் மறுபக்கத்திற்கும் (far side) இடையிலான எல்லையில் அமைந்துள்ளது. பூமியில் இருந்து பார்ப்பதற்கு இது நிலவின் விளிம்பில் மிகச்சிறிய அளவில் மட்டுமே தெரியும்.

**வடிவம்:**

இது பல அடுக்குகளைக் கொண்ட ஒரு வளையம் போன்ற அமைப்பாகும் (multi-ring basin). இது ஒரு மாபெரும் காளைக் கண் (bull's-eye) போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கும்.

**உருவாக்கம்:**

இது சுமார் 3.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாபெரும் விண்கல் நிலவின் மீது மோதியதால் உருவானது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

**அளவு:**

இதன் விட்டம் சுமார் 900 கிலோமீட்டர்கள் ஆகும். இதனைச் சுற்றி 'மான்டெஸ் ரூக்' (Montes Rook) மற்றும் 'மான்டெஸ் கார்டில்லெரா' (Montes Cordillera) ஆகிய இரண்டு பெரிய மலைத்தொடர்கள் உள்ளன.

**சமீபத்திய செய்தி:**

ஏப்ரல் 2026ல், நாசாவின் ஆர்ட்டெமிஸ் 2 (Artemis II) விண்கலத்தில் சென்ற விண்வெளி வீரர்கள், மனித வரலாற்றிலேயே முதல்முறையாக இந்தப் பேசின் முழுவதையும் தங்களின் நேரடிப் பார்வையில் பார்த்து புகைப்படம் எடுத்து சாதனை படைத்தனர்.

நிலவின் பிற பகுதிகளில் உள்ள பள்ளங்களை ஆய்வு செய்ய இந்தப் பேசின் ஒரு சிறந்த முன்மாதிரியாக (textbook example) விளங்குகிறது.



**காளைக்கண் வடிவம்:**

இந்த பேசின் பல அடுக்குகளைக் கொண்ட வளையங்களால் ஆனது. இதனை விண்வெளி வீரர்கள் "நிலவின் ஒரு முத்தம்" அல்லது "ஜோடி உதடுகள்" போல இருப்பதாக வர்ணித்துள்ளனர்.

**ஆர்ட்டெமிஸ் 2 பயண விவரங்கள்**

பயண காலம்: இந்த 10 நாள் பயணம் ஏப்ரல் 1, 2026 அன்று தொடங்கியது.

விண்வெளி வீரர்கள்: ரீட் வைஸ்மேன், விக்டர் க்ளோவர், கிறிஸ்டினா கோச் மற்றும் ஜெரமி ஹேன்சன் ஆகியோர் இந்தப் பயணத்தில் பங்கேற்றனர்.

**சாதனை:**

50 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு நிலவைச் சுற்றிப் பயணம் செய்த முதல் மனிதர்கள் இவர்களே. இவர்கள் பூமியிலிருந்து மனிதர் பயணம் செய்த மிக நீண்ட தூரத்தை எட்டி (சுமார் 4,00,000 கி.மீ க்கும் மேல்) சாதனை படைத்தனர்.

**புதிய கண்டுபிடிப்புகள்:**

ஓரியண்டேல் பேசினுக்கு அருகில் உள்ள இரண்டு சிறிய பள்ளங்களுக்கு இன்டெக்ரிட்டி (Integrity) மற்றும் கேரோல் (Carroll) என இவர்கள் பெயரிட்டனர்.

# Present Tensions in the Middle East: Escalation, Global Impact, and the Imperative for De-escalation

By AV

## Introduction

The Middle East has once again emerged as the focal point of international concern, as tensions between the United States, Israel, and Iran have escalated into open confrontation. What began as targeted military action has rapidly expanded into a broader regional crisis, drawing in multiple actors and raising fears of prolonged instability. The significance of this conflict lies not only in its immediate impact but also in its potential to reshape global economic and political dynamics.

## US–Israel Offensive and Strategic Objectives

The initial phase of the conflict was defined by a series of coordinated strikes on Iranian military and strategic infrastructure. These operations aimed to weaken Iran's defensive capabilities and limit its regional influence. Key targets included missile facilities, suspected nuclear installations, and command centers. While the strikes demonstrated significant military precision and reach, they did not achieve complete strategic dominance. Instead, they set the stage for a prolonged and unpredictable confrontation.

## Iran's Countermeasures and Regional Spillover

Iran's response was immediate and multifaceted, involving missile and drone attacks on Israeli territory and U.S. assets in the Gulf. Beyond direct retaliation, Iran leveraged its network of allied groups across the region, leading to a widening of the conflict's geographical scope. This expansion has increased tensions along key maritime routes, particularly the Strait of Hormuz, a critical artery for global energy supply. The risk of disruption in this corridor has amplified concerns about energy security worldwide.

## Humanitarian Consequences

The human cost of the conflict has been severe. Civilian populations have been disproportionately affected, with airstrikes and missile attacks damaging residential areas and essential infrastructure. Hospitals, schools, and public utilities have faced significant strain, while displacement has risen steadily. The humanitarian situation is compounded by limited access to essential services, creating conditions that could lead to long-term social and economic instability.

## Global Economic Impact

The economic repercussions of the conflict have been both immediate and far-reaching. Oil prices have surged in response to fears of supply disruptions, particularly in light of tensions surrounding the Strait of Hormuz. This has contributed to rising inflation and increased costs across multiple sectors, including transportation, manufacturing, and agriculture. For many economies, especially those dependent on energy imports, like India, the conflict has introduced new vulnerabilities and intensified existing challenges.

## Geopolitical Shifts

The conflict has also reshaped geopolitical alignments, as countries reassess their positions and alliances. While some states have expressed explicit support for one side, others have sought to maintain neutrality. Major global powers are recalibrating their strategies, recognizing both the




risks and opportunities presented by the evolving situation. These shifts have implications not only for the Middle East but also for the broader international order.

## The Imperative for De-escalation

In light of the escalating tensions, the need for de-escalation has become increasingly urgent. Continued military engagement raises the risk of further expansion and unintended consequences. Diplomatic efforts, including ceasefire negotiations and confidence-building measures, are essential to stabilize the situation. The involvement of neutral mediators could facilitate dialogue and help bridge the divide between opposing parties.

## Potential Consequences of Prolonged Conflict

If the conflict continues, the repercussions could be severe and long-lasting. Regional instability may deepen, drawing in additional actors and complicating efforts to achieve resolution. Economic disruptions could intensify, potentially leading to broader global consequences. The humanitarian crisis is likely to worsen, with increased displacement and further strain on resources. In such a scenario, the prospects for recovery and stability would become increasingly uncertain.

## Conclusion

The present tensions in the Middle East represent a critical juncture with far-reaching implications. The conflict underscores the interconnected nature of modern geopolitics, where regional events can have global consequences. A shift toward de-escalation and diplomatic engagement is essential to prevent further deterioration. The decisions made in the coming period will play a decisive role in shaping the future of the region and the stability of the international system.



# The US & Israel & Iran War is Metamorphizing the Global Economy

By Chellapandian

The US&Israel&Iran war is changing the Geo &Political Order Global Economics.

Before the diminishing of Covid Era Problems the New Escalation has crippled the Global Economy. Every Country on this is Earth is Affected. The Largest Oil Industry Shock after 1973 and 1979.

The Cascading effect is Realised in Asia which most oil is Imported from Persian Gulf. Philippines has Declared National Emergency, Rationing the Petrol and Diesel.

Japan has ordered to Release the Reserved oil for the people of Japan. Unanimously 32 Countries has Agreed to Release 400 Million Barrels oil from their Emergency oil Reserves.

In our country the Lack of Infra Structure on Constructing Oil Storage Tanks and separate corridor for Transporting Essentials were not met with other countries. Poor Planning in Emergency Handling is very poor in our Country.

Apart from LPG, CNG, Crude Brent oil. There are other Petro chemicals are More Essential is in High Demand in Various Industries.

Examples, Synthetic Fibre, Acrylic Fibre, Nylon, Polyester Staple Fibre, Polyester Industrial Yarn,



PVC Pipes, HDPE, Synthetic Rubber, Plastics, Lubricant oil, Engine Oil, Bitumen, Daily House



Hold Items, Packaging Bottles, Containers, Bags Automotive Spare Parts, Paints, Coatings, Adhesives Detergents, Fertilizer, Pesticides, Fungicides, Naphtha Bas Gas, Natural Gas. Foam, Resins, Clothing, Electronics, Appliances, Healthcare products, Aviation Fuels,.

Due to shortage of Fertilizer, Pesticides, Fungicides, The whole Agriculture would be in Verge of Collapse. The Crop growing Area will be Limited. In Addition to the Global Warming and EL Nino Effect, Flooding, Less Seasonal Precipitation will have a Huge Impact on our Agricultural Industry.

Our Union Government Does not have a Buffer Stock Policy. Even if it is there How there are Implementing on this crisis. FCI Go Downs or State Run Agricultural Societies not on par with International Standards,

Our Forefathers anticipating the Crisis stored Seed Grains in Gopurams of Big Temples to mitigate the Problem During Crisis.

This War will increase the Interest Rates Leads to Increase the Mortgage Loans, Subsequently Affects the Poor People.



This war will Change the World Economy into Multipolar Oil Markets. Iran Directly Challenging the Global Dominance of US Dollar and Petro Dollar system.

Before 1960 The emirates were using our Indian Rupees for day&to&day Life. After Discovery of oil, They Made their Own Currency as Dinar.

In Future the oil Industry may Change to Chinese Currency Yuan into Petro Yuan Deal.

The US Dominance on Oil and Foreign Policy on Control of International Revenues from Oil Exports would be diminished after the war. The Grand Plan does not worked out on Iran.

தக்கரார் குரல் | YouTube




NDA-கூட்டணி... பாஜக....
இறங்கிவந்துள்ளது




சொல்வது ஒன்று.. செய்வது ஒன்றா..?
ஏமாற்றமடைந்த தொண்டர்கள்




ஜி.கே.மணியே அத்தனைக்கும் காரணம்
கொந்தளிக்கும் பாமக நிர்வாகி




குப்பை கிடங்கில் கிடைத்த சடலம்..
சிதைந்த பெண்ணின் உடல்...




பரந்தூர் விமான நிலையம்.. நீரினால்
பேராபத்து... எச்சரித்த நிபுணர்?




Tvkவில் இருந்து இளைஞர்கள்...
திமுகவிற்கு திரும்புவார்கள்..




கரூரில் திமுக MLA அராஜகம்?
பத்திரிக்கையாளர்களை தாக்கிய மணல் மாஃபியா!!!




தமிழகத்தின் தலையெழுத்தை பிற மாநிலத்தவர்கள் தீர்மானிப்பதா..?
கொந்தளிக்கும் தமிமுன் அன்சாரி

@PHONE APP

@WEBSITE

@YOUTUBE

@INSTAGRAM

THAKKAAR KURAL, English & Tamil Monthly, PRGI Registration No: TNBIL/25/A2396




Published by S Esuf Basha, Printed Ali Mohamed Sayeed, Published at No.4, Pandiyan Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai & 600 041, Printed at J.M.Process No.29, V.N.Dass Road , Border Thottam, Mount Road, Chennai&600002, Editor. S.Esuf Basha